# சபை வளர்ச்சியின் நியமங்கள் (4:7-16)

*பயிற்சிக் கப்பற்படைப் பகுதிக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்த இரண்டு போர்க் கப்பல்கள் திட்டமிட்ட நடவடிக்கையின் நிமித்தமாக கடலில் இருந்தன. தட்பவெப்ப நிலையானது ஊற்றியெடுக்கும் மழை, அதிக காற்று மற்றும் தொடர்ந்து மாறியடிக்கும் நீர் ஆகியவற்றுடன் அச்சமூட்டுவதாக இருந்தது. அடர்ந்த பனிமூட்டத்துடன் இந்தத் தட்பவெப்ப நிலை ஒரு இரவில் தொடர்ந்து நிலவிக் கொண்டிருந்தது. கப்பலின் மேல் பாலத்தில் நின்றிருந்த கப்பல் தலைவர் சூழ்நிலையை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.*

*இருட்டத் தொடங்கிய சற்று நேரத்தில் பாலத்திலிருந்து வெளியே கண்ணோக்கிக் கொண்டிருந்த ஒருவர் "நட்சத்திர வளைவில் ஒரு ஒளி காணப்படுகிறது" என்று கூவினார்.*

*கப்பல் தலைவர், ''அது நிலையாக உள்ளதா அல்லது நகர்ந்து கொண்டுள்ளதா?" என்று கேட்டார்.*

*"தலைவரே, அது நிலையாக உள்ளது"*

*அவர்கள் தாங்கள் இன்னொரு கப்பலுடன் மோதப் போவது உறுதி என்று நினைத்தார்கள்.*

*கப்பல் தலைவர், "அந்தக் கப்பலுக்கு, 'நாம் மோதப் போகிறோம், எனவே உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவு மாற்றிக் கொள்ளுங்கள்' என்று அறிவுறுத்துங்கள்" என்று கட்டளையிட்டார்.*

*"நீங்கள் 20 பாகை அளவு மாற்றுவதே உகந்தது" என்று பதில் வந்தது.*

*கப்பல் தலைவர், "நான் ஒரு கப்பல் தலைவன்; உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவு மாற்றிக் கொள்ளவும்" என்று இன்னொரு செய்தி அனுப்பச் செய்தார்.*

*"நான் இரண்டாம் நிலை கடல் மாலுமி, நீங்கள் 20 பாகை அளவு மாற்றிக் கொள்ளுவதே சாலச் சிறந்தது" என்று பதில் வந்தது.*

*அவ்வேளையில் கப்பல் தலைவர் கடுங்கோபமுற்றார். " 'நாங்கள் ஒரு யுத்தக் கப்பலில் உள்ளோம், உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவு மாற்றுங்கள்' என்று செய்தி அனுப்பு"*

*மினுக்கிடும் சைகை ஒளியுடன், ''நான் ஒரு கலங்கரை விளக்கம். உங்கள் ஓட்டத்தை 20 பாகை அளவுக்கு மாற்றிக் கொள்ளுக" என்று பதில் திரும்ப வந்தது.*

*கப்பல் தலைவர் உடனடியாக கப்பலின் ஓட்டத்தை மாற்றும்படி தம் மனிதர்களுக்குக் கட்டளையிட்டார்.*[1]

*கப்பல் தலைவர் சூழ்நிலை பற்றிய தமது கண்ணோட்டத்தின் யூக உணர்வில் இயங்கிக் கொண்டிருந்தார். அவர் உண்மை நிலையை எதிர் கொள்ளும் வரையில் தொடர்ந்து அவ்விதமாகவே செயல்பட்டார். வெளிச்சம் ஒரு கலங்கரை விளக்கத்திலிருந்து வந்தது என்பதை அறிந்த பொழுது அவர் தம் கப்பலின் ஓட்டத்தை மாற்றுவதற்கு முடிவு செய்தார்.*

*கலங்கரை விளக்கம் என்பது நாம் கொள்கைகள் என்று அழைக்கின்ற வற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடும். வேதாகமத்தில் கலங்கரை விளக்க மாதிரியிலான கொள்கைகள் பல அடங்கியுள்ளன. அவைகள் ஒருக்காலும் மாறுவதில்லை. அவைகள் முற்றானவைகளாய் உள்ளன. அவைகள் நேற்று உண்மையாய் இருந்தன, இன்று உண்மையாய் உள்ளன, நாளையும் அவைகள் உண்மையுள்ளவையாக இருக்கும்.*

*வாழ்வு முழுவதற்கும் ஒரு ஆணுக்கு ஒரு பெண்தான் இருக்க வேண்டும் என்பது போன்ற நியமத்தை திருமணத்திற்கான கலங்கரை விளக்க நியமமாக வேதாகமம் தருகின்றது (ரோமர் 7:1-3). அது பிள்ளைகளை இயேசுவை நோக்கி வழிநடத்திச் செல்லும் வகையில் வளர்க்க வேண்டும் என்பது போன்ற கலங்கரை விளக்கக் கொள்கைகளை (எபே. 6:4) பெற்றோருக்குத் தருகின்றது. அது பிள்ளைகளுக்கும் (6:1-3), வேலைக்காரர் களுக்கும் வேலைக்கு அமர்த்துபவர்களுக்கும் (6:5-9), பணத்தைக் கையாளுவதற்கும் (1 தீமோ. 6:9, 10), திட்டங்கள் தீட்டுவதற்கும் (யாக். 4:13-15) மற்றும் வாழ்க்கை முழுவதற்கும் (2 பேது. 1:3) கூட கலங்கரை விளக்க நியமங்களைத் தருகின்றது.*

*புதிய ஏற்பாடானது சபைக்கும்கூடக் கலங்கரை விளக்க நியமங்களை வழங்குகின்றது. அவற்றில் சிலவற்றை எபேசியருக்கு எழுதிய நிருபம் தன்னில் கொண்டுள்ளது. தேவன் அளிக்கின்ற ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங் களும் கிறிஸ்துவுக்குள் காணப்படுகின்றன (1:3). கிறிஸ்து, சபைக்குத் தலைவராக இருக்கின்றார் (1:22). சபை, கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது (1:23). நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகின் றோம் (2:8). நாம் ஒரே சரீரத்தின் உறுப்புக்களாக ஒன்று கூட்டப்பட்டுள் ளோம் (3:6). ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே நம்பிக்கையும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே தேவனும், ஒரே பிதாவும் உள்ளன(ர்) (4:4-6).*

*4:7ல் தொடங்கி, நாம் சபை வளர்ச்சியைப் பற்றிய வசனப் பகுதி ஒன்றைக் கண்டறிகின்றோம். இது சபை வளர்ச்சியை நாடுவதில் நமக்கு உதவ கலங்கரை விளக்க நியமங்கள் சிலவற்றை நமக்கு அளிக்கின்றது.*

## சபை வளர்ச்சிக்குப் போதுமானதல்லாத நியமங்கள்

*வேதாகம ரீதியான நியமங்களை நாம் ஆராய்வதற்கு முன்பு, நாம் சபை*

*வளர்ச்சிக்கென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பின்வரும் நியமங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம். இவைகள் உதவிகர மானவைகளாய் இருக்கக் கூடுமென்றாலும், அடிக்கடி இவைகள் மிகையாக வலியுறுத்தப்படுகின்றன. இவைகள் தங்களில் போதுமானவைகளாய் இருப்பதில்லை.*

*1. "நாம் நவீனத் திட்டங்களை நன்கு திட்டமிட்டு நடைமுறைப் படுத்தும் போது/செயல்படுத்தும்போது சபை வளர்ச்சி நடைபெறுகின்றது." சபை வளர்ச்சி கொண்டிருப்பதற்குச் செய்ய வேண்டிய பணிகள் பற்றி நமக்குக் கூறுவதற்கு பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவைகள், வீடு சந்திப்பு, விளம்பரப்படுத்துதல், பிரசங்கித்தல், வேதாகமப் பள்ளி, மற்றும் பல விருப்பத் தேர்வுகளின் மூலம் சபை வளர்ச்சியை ஏற்படுத்துவது எப்படி என்று விளக்கப்படுத்துகின்றன. சபை வளர்ச்சி பற்றி புத்தகங்களுடன் கூடுதலாக, வெற்றிகரமான சபைகளை அடிக்கடி ஆராய்ந்து கற்கப் படுகின்றன. வளருகின்ற சபையின் நடத்துனர்கள் சரியாகச் செய்வது என்ன என்பதைக் கண்டறிய பிற சபைகளின் நடத்துநர்கள் அந்தச் சபைக்கு வந்து கூடுவார்கள். அவர்கள் புத்தகங்களையும் ஒலி நாடாக்களையும் வாங்கு வார்கள், கருத்தரங்குகளுக்குச் செல்வார்கள், மற்றும் தங்கள் உள்ளூர் சபையை வளரச் செய்யத் தங்கள் கைகளில் திட்டங்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் வீடு திரும்புவார்கள்.*

*2. "நன்கு பயிற்சி பெற்ற, திறமை மிக்க ஊழியர்களை ஒன்றுகூட்டும் பொழுது சபை வளர்ச்சி நடைபெறுகின்றது." நாம் பல பணியாளர்களின் யுகத்தில் வாழ்கின்றோம். நாம் பிரசங்கிக்கும் ஊழியர்கள், ஈடுபாட்டு ஊழியர்கள், இளைஞர்களுக்கான ஊழியர்கள், குடும்ப ஊழியர்கள், கல்வி ஊழியர்கள் மற்றும் தனிநபர்களுக்கான ஊழியர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளோம். ஊழியர் எவ்வளவு திறமையானவராக இருக்கின் றாரோ, அவ்வளவு அதிகமாக சபை வளர்ச்சியைக் காணும்படி எதிர் பார்க்கலாம்.*

*3. "ஒவ்வொரு உறுப்பினரும் சபையின் திட்டங்கள் ஒன்றில் பயிற்று விக்கப்பட்டு, ஈடுபடுத்தப்படும் பொழுது சபை வளர்ச்சி நடை பெறுகின்றது." ஒவ்வொரு உறுப்பினரும் ஈடுபாடு கொண்டவராய் இருக்க வேண்டும் என்று சபை நடத்துநர்கள் விரும்புகின்றனர். மக்கள் பல்வேறு திட்டங்களுக்கென்று தேர்வு செய்யப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, "பொருத்தப்பட" வேண்டும். இது சபை வளர்ச்சியை உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.*

*4. "சபையின் வளர்ச்சியானது நபர் வருகை, காணிக்கை மற்றும் சபையினால் ஆதரிக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் வளர்ச்சியி னால் அளக்கப்பட முடியும்." ஒரு உள்ளூர் சபையானது அதன் நபர் வருகையிலும் காணிக்கையிலும் கடந்த ஆண்டில் இரட்டிப்பாகியுள்ளது என்று அறிவிப்புப் பலகையில் மக்கள் வாசிக்கின்ற பொழுது, "அது ஒரு வளருகிற சபையாக உள்ளது. அவர்கள் முன்னேறிக் கொண்டிருக் கிறார்கள்" என்பதாக அவர்கள் நினைக்கின்றார்கள். சில வேளைகளில் ஒரு உள்ளூர் சபையானது கூட்டங்கள், பணிக்கால அளவைகள், கருத்தரங்கு*

*கள், தியானங்கள், பகல் நேரப் பராமரிப்புத் திட்டங்கள் மற்றும் முதிர் வயதுக் குடிமக்களின் குழுக் கூட்டங்கள் போன்றவற்றில் மும்முரமாய் ஈடுபட்டுள்ளதைக் கவனிக்கின்றோம். அந்த சபையைப் பற்றி நாம், "அது வளர்ந்து கொண்டு இருக்க வேண்டும்" என்று முடிவு செய்கின்றோம்.*

*இந்த நான்கு கொள்கைகள் இன்றைய நாட்களில் சபையின் நடத்துனர்கள் பலரால் மேற்கொள்ளப்படுகின்ற அணுகுமுறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. இந்த நான்கு கூற்றுகளில் ஒவ்வொன்றிலும் சத்தியத்தின் ஒரு கூறு நிலவுகின்றது, ஆனால் இந்த அணுகுமுறைகள் மாத்திரமே சபை வளர்ச்சியை உண்டாக்கப் போதுமானவைகளாய் இருப்பதில்லை.*

## சபை வளர்ச்சிக்கான கலங்கரை விளக்க நியமங்கள்

*சபை வளர்ச்சி பற்றி கலங்கரை விளக்க நியமங்கள் சிலவற்றை நாம் ஆராய்கையில், பவுல் எபேசியருக்கு (இதைப் பற்றி) எழுதியது என்ன என்பதை நாம் வாசிப்பது அவசியம்:*

> *கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது ... மேலும் நாமனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும், இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது (4:7-16).*

### நியமம் ஒன்று

*இரட்சிப்பைப் போலவே சபை வளர்ச்சியும் கூட கிருபையின் விஷயமாகவே உள்ளது. பவுல், "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது" (4:7) என்று கூறினார். இரட்சிப்புக்கான கிருபை உள்ளது (2:8), மற்றும் வல்லமை*

*யளிக்கும் கிருபையும் உள்ளது, அதையே பவுல் இவ்வசனத்தில் குறிப் பிட்டார். வல்லமையளிக்கும் கிருபை என்பது தேவனுடைய மகிமைக் காகக் குறிப்பிட்ட சிலவற்றைச் செய்யும் வல்லமை என்பதாக உள்ளது. இந்தக் கருத்தைப் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் எடுத்துரைத்தார்: "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங் களுள்ளவர்களானபடியினாலே" (ரோமர் 12:6). வல்லமையளிக்கும் கிருபை என்பது சபையின் உண்மையான வளர்ச்சிக்குத் திறவுகோலாக உள்ளது. வளர்ச்சி என்பது நமது திட்டங்கள் அல்லது வியூகங்களின் விளைவாக மட்டுமே நடைபெறுவதில்லை. இது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் இயேசு கொடுக்கின்ற கிருபையின் மூலமாக - ஒவ்வொரு நபரையும் வரம் பெற்றவராக்குகின்ற கிருபையின் மூலமாக - நடைபெறுகின்றது.*

*இதைப் பற்றிப் பவுல் ஸ்டீவென்ஸ் எழுதிய பின்வரும் பகுதியை நான் விரும்புகின்றேன்:*

> *ஒவ்வொரு உறுப்பினரும் கிறிஸ்துவிடமிருந்து கிருபை அளிக்கப் பட்டுள்ளார் என்று புரிந்து கொள்ளுகின்ற சபையில், ஒவ்வொரு உறுப்பினரும் உயர்வாய் மதிக்கப்படுவார், ஒவ்வொரு ஊழியமும் பாராட்டப்படும், கிறிஸ்துவின் கிருபையினுடைய மாறுபடும் ஒவ்வொரு அனுபவமும் போற்றிப் பாதுகாக்கப்படும். இப்படிப்பட்ட ஒரு சுற்றச் சூழலானது "நீங்கள் எங்களுக்குத் தேவை!" என்று அறிவிக்கும்.*[2]

*ஒவ்வொரு உறுப்பினரும் இன்றியமையாதவராக இருக்கின்றார்! அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று உள்ளூர் சபையைச் சுற்றிலும் கண்ணோக்குங்கள். நீங்கள் அங்குள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைக்குச் சம அளவில் தேவனு டைய கிருபையின் காணக்கூடிய வெளிப்பாடுகளினால் சூழப்பட்டுள்ள தைக் காண்பீர்கள். கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வல்லமை யளிக்கும் கிருபையின் மூலமாக சபை வளர்ச்சிக்குத் தேவையான வரங்களையும் கிருபையையும் தேவன் அருளுகின்றார்.*

## நியமம் இரண்டு

*எல்லாக் கிறிஸ்தவர்களும் தாங்கள் பெற்றுக் கொண்டுள்ள கிருபை யுடன் ஊழியம் செய்கின்ற பொழுது சபை வளர்ச்சி ஏற்படுகின்றது. பல சபைகள் தங்கள் கடிதத் தாள்களில், மூப்பர்கள் உதவிக்காரர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் பெயர்களைப் பட்டியலிடுகின்றன. "ஊழியர்கள்" என்று அட்டவணையிடப்படும் பெயர்கள் வழக்கமாகப் பிரசங்கிப்பவர் களாய் உள்ள ஊழியர்களின் பெயர்களாக உள்ளன. இது தவறாக வழிநடத்தக் கூடும். உண்மையில், உள்ளூர் சபையின் உறுப்பினர்கள் யாவரும் அதன் ஊழியக்காரர்களாக உள்ளனர். ஊதியம் பெறும் ஊழியப் பணியாளர் உட்பட மற்ற ஒவ்வொருவரைப் போலவும் நீங்களும் கிறிஸ்துவின் ஊழியக்காரராக இருக்கின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் கிருபையினால் ஊழியக்காரராக இருக்கின்றீர்கள்.*

*4:16ல் நாம், "அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது'' என்று வாசிக்கின்றோம். இந்த வேத வசனமானது, பிற மக்களைத் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடும்படி நான் உற்சாக மூட்டும் வழிமுறையை மீண்டும் ஆராய்ந்து பார்க்கும்படி எனக்கு அறைகூவல் விடுக்கின்றது. அதை நான் எப்பொழுதுமே பின்வரும் வழிமுறையில் அணுகுவது உண்டு: ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு உதவி தேவைப்பட்டால், அந்த ஊழியத்தைச் செய்வதற்காக மக்களைப் பணிக்கமர்த்த நான் முயற்சி செய்தேன். ஊழியத்தில் ஏற்கனவே உள்ள (பல) பகுதிகளில் மக்களைப் பொருத்த என்னால் இயன்ற அளவு சிறப்பாக முயற்சி செய்தேன். மிகச் சிறந்த அணுகுமுறை என்பது, தனிநபர்களிடம், நீங்கள் மிகவும் விரும்பி கர்த்தருக்குச் செய்யக்கூடிய காரியம் என்ன? இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்தும் ஊழியம் என்ற வகையில் நீங்கள் செய்யும்படி இயேசு எதை விரும்புவார் என்று நீங்கள் நம்புகின்றீர்கள்? அதை நீங்கள் செய்ய உங்களுக்கு உதவும்படி நாங்கள் விரும்புகின்றோம்'' என்று கூறுவதாயிருக்கும்.*

*ஒவ்வொரு கிறிஸ்தவரும் சபையில் கிருபையின் ஊழியராக இருக்கின்றார். இயேசு உங்களுக்கென்று தம் சிந்தையில் கொண்டுள்ள ஊழியத்தைச் செய்வதற்கென்றே உங்களை சபையில் வைத்திருக்கின்றார்.*

## நியமம் மூன்று

*ஊழியத்திற்கென்று மக்களைத் தகுதிப்படுத்த/தேவையானவற்றை அளிக்க நடத்துனர்கள் ஒப்புக் கொடுத்தல் உள்ளவர்களாகும் பொழுது, சபை வளர்ச்சி நடக்கின்றது. பவுல் பின்வருமாறு கூறினார்:*

> *பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் (4:12, 13).*

*நாம் பவுலின் அறிவுறுத்தல்களை எடுத்துக்கொண்டு, அவற்றை வகுப்புகள், பயிற்சித் திட்டங்கள், மற்றும் பணி மனைகள் - சபையில் பயன்படுத்தும்படி திறன்களை மக்களுக்குப் போதிக்கக்கூடிய மற்ற எந்த விஷயங்கள் - ஆகியவற்றில் நடைமுறைப்படுத்துகின்றோம். இருப்பினும், இது "சீர்பொருந்தும் பொருட்டு" என்ற கருத்தை வரையறைக்கு உட்படுத்து கின்றது. சீர் பொருந்துதல் என்பது ஒரு நபர், ஊழியத்திற்கான திறன்களை மேம்படுத்த உதவுவதைக் கொண்டுள்ளது; ஆனாலும், இன்னும் அதிகமாக இது பண்பு, சிந்தை மற்றும் அந்த நபரின் இருதயம் ஆகியவற்றை வடிவமைத்தல் என்றும் கூட அர்த்தப்படுகின்றது.*

*ஊழியத்திற்கு மக்களை சீர்பொருந்தச் செய்வதில் இயேசு விற்பன்னராக இருந்தார். அவர் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களைச் சீர்பொருந்தச் செய்வதற்காக அவர்களுடன் மூன்று ஆண்டுகளைச் செலவிட்டார். தொழுநோயாளிகளுக்கு ஊழியம் செய்வதற்காகப் பத்து படிநிலை முறைமைகளை அவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டும் என்று இயேசு கேட்டுக் கொண்டதாக நான் ஒருக்காலும் வாசித்திருக்கவில்லை. அவர்களுக்கு சபை நிர்வாகம் பற்றி இயேசு போதித்த இடத்தை என்னால் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக, அவர்களுடன் அவர் நேரத்தைச் செலவிட்டார். அவரது வல்லமையைக் கண்டார்கள் மற்றும் அவர்கள் முழங்காலிடும்படி கொண்டு வரப்பட்டார்கள். அவர் ஜெபித்ததை அவர்கள் கேட்டார்கள், மற்றும் ஜெபிக்கும்படி (அவரால்) போதிக்கப்பட்டார்கள். இயேசுவுடன் இருப்பதன் மூலம் சீஷர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பது எவ்வாறு என்று கற்றுக் கொண்டார்கள்.*

*இந்த உதாரணத்தை சபை நடத்துநர்கள் பின்பற்றுவது அவசியமாக உள்ளது. இயேசுவுடன் இருப்பதன் மூலம்—அதாவது வசனத்தில், வழிபாட்டில் மற்றும் ஜெபத்தில் அவருடன் நேரத்தைச் செலவிடுவதன் மூலம்—கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் வாழ்வது எவ்வாறு என்று கற்றுக் கொள்வார்கள். தேவனுக்காகப் பசியும் தாகமும் கொண்டுள்ளவைகளாக நமது இருதயங்களை மாற்றுகின்ற ஆராதனைக் கூட்டங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. நம்மை உருமாற்றி நமது சிந்தைகளைப் புதுப்பிக்கின்ற அறிவுறுத்தல்கள் தேவ வசனத்திலிருந்து நமக்குத் தேவைப்படுகின்றன. நமது ஒப்புக் கொடுத்தலையும் ஒருவர் பிறரின் மீது சார்ந்திருத்தலையும் ஆழப்படுத்துகின்ற உரையாடல்களைப் பிற கிறிஸ்தவர்களுடன் நாம் மேற்கொள்வது அவசியமாக உள்ளது. இயேசு சபை நடத்துநர்கள் சீர்பொருந்தும்படி அழைக்கின்றார், இது கிறிஸ்தவர்கள் ஊழிய இருதயத்தையும் இயேசுவின் ஆவியையும் தங்களுக்குள் மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வாழ்வுமுறையை அவர்களுக்கு ஈந்தளிக்க அழைக்கின்றது.*

## *நியமம் நான்கு*

*சபை வளர்ச்சியானது தேவனுடைய பார்வையில் பக்குவத்தை அளவிடுதலில் உள்ளது. "கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி எழுப்புகின்ற" (4:12) பணியின் ஊழியங்களுக்காகத் தேவனுடைய மக்கள் சீர் பொருந்தும் படியாக்கப்படுகின்றனர். இது நடப்பதற்குப் பவுல், "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப் பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்" (4:11)படி அழைத்தார். அவர் இந்தப் பக்குவப்படுத்தலின் செயல்முறையை, சரீரத்தின் வளர்ந்தேறுதல் (4:15) மற்றும் அது தன்னையே கட்டியெழுப்புதல் (4:16) ஆகியவற்றைக் குறிப்பிடுவதினால் மீண்டும் வலியுறுத்தினார். பக்குவப்படுதலின் கருத்தானது பவுலின் எழுத்துக்களில் ஊடுருவிக்கிடந்தது.*

*தேவனுடைய பார்வையில் சபை வளர்ச்சி என்பது பக்குவம் என்பதாக உள்ளதேயன்றி எண்ணிக்கை என்பதாக இருப்பதில்லை. தேவன் தாம் அங்கிகரிக்கின்ற ஒருவருடைய சாயலை நமது இருதயங்களில் கண்ணோக்க விழைகின்றார். அவர் தமது குமாரனின் சாயல் நமக்குள் தோன்றத் தொடங்குவதைக் கண்டறிய நம்பிக்கையாய் இருக்கின்றார். நாம் கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி அவர் விரும்புகின்றார்.*

## *முடிவுரை*

*நாம் சபை வளர்ச்சிக்கான கலங்கரை விளக்க மாதிரியிலான நான்கு நியமங்களை ஆய்வு செய்துள்ளோம். இந்தக் நியமங்களுக்கு ஏற்ப நம்மை நாம் சரி செய்து கொண்டால், தேவன் நமது உள்ளூர் சபைகளை வளருகின்றவைகளாகக் காண்பார்.*

*தனிநபர் என்ற வகையில் உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் உறுப்பினராய் உள்ள சபைக்கு நீங்கள் உங்களையே கொடையாக அளிக்கின்றீர்களா? பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதாக உள்ள இயேசுவின் கிருபை சிலவற்றை நீங்கள் உங்களுக்குள் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் அந்தக் கிருபைக்கு உண்மையுள்ள ஊழியராக இருக்கின்றீர்களா?*

*நடத்துநர்களே, நீங்கள் திட்டங்களில் துளைகளை நிரப்புகின்றீர்களா? அல்லது தனிநபர்கள் சபைக்கான தங்களின் தனிச்சிறந்த திறன்களை உணர உதவுகின்றீர்களா? மக்கள் ஊழியம் செய்யும் இருதயங்களையும் ஆவிகளையும் (தங்களில்) மேம்படுத்திக்கொள்வதற்குரிய சூழ்நிலையில் உங்களால் இயன்ற அளவு அவர்களை உற்சாகப்படுத்துகின்றீர்களா?*

*நாம் ஒவ்வொருவரும் பக்குவத்தின் இலக்கைச் சிந்தையில் கொண்டுள்ளோமா? நாம் கிறிஸ்துவின் சிந்தையைக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றோமா? நான் எனது பங்கையும் நீங்கள் உங்களது பங்கையும், நடத்துநர்கள் தங்களது பங்கையும் நிறைவேற்றினால், சபையானது தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும் வகையில் வளரும் என்று இயேசு உறுதியளித்துள்ளார்.*

---

*குறிப்புகள்*

[1]Frank Koch, quoted by Stephen Covey, *The 7 Habits of Highly Effective People: Powerful Lessons in Personal Change* (New York: Simon & Schuster, 1989), 33. [2]R. Paul Stevens, *Liberating the Laity: Equipping All the Saints for Ministry* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1985), 30.